[1979 நவம்பர் 2

குமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்கப்போரிட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை.

* வினா எண். 80-அ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தை தாய்த்தமிழகத்தோடு இணைக்க அறப் போரிலீடுபட்ட தியாகிகளுக்கு உதவித் தொகையினை மீண்டும் வழங்கிடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் வழங்கப்பட உள்ளது ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு அரசு 75 ரூபாய் வழங்கிவந்ததை ரூ. 100-ஆக உயர்த்துவதாக அறிவித்து இருந்தது. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதா ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, நாட்டு விடுதலை வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஓய்வூதியத்தின் அடிப்படையில் இந்தி எதிர்ப்பு மற்றும் எல்லை இணைப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 75 அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு 19—4—1974 முதல் செயற்படுத்தியது. சென்னையைச் சேர்ந்த திரு. தளவாய் என்பவர் இத்திட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டமையால், அவர் டில்லி உச்ச நீதிமன்றத்திலும் முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம், அந்த முறையீட்டின் மீதான தனது தீர்ப்பில் அரசு வகுத்துள்ள இந்த ஓய்வூதியத் திட்டம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பு கூறிவிட்டது. அந்தத் தீர்ப்பிற்கிணங்க இந்த ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. மேற்குறித்த தீர்ப்பு முக்கியமாக இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பற்றியே கூறப்பட்டிருந்தாலும் எல்லை இணைப்புப் போராட்ட வீரர்களுக்கும் சேர்த்து ஒரே திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வகுக்கப்பட்டிருந்தமையாலும், அந்த ஓய்வூதியத் திட்டமே முரணானது என்று கூறப்பட்டமையால், எல்லை இணைப்புப் போராட்ட

வீரர்களுக்கு அளிக்கப்பட்ட ஓய்வூதியமும் சேர்த்து நிறுத்தப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 31—1—1976 முடிய கீழ் குறித்தபடி 1,548 பேர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டது.

1. இந்தி எதிர்ப்புப் போராட்டம்	1,471 பேர்.
2. எல்லை இணைப்புப் போராட்டம்	64 பேர்.
3. கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம்	9 பேர்.
4. தேவிகுளம் பீர்மேடு இணைப்புப் போராட்டம்	4 பேர்.
மொத்தம்	1,548 பேர்.

மொழியைப் பொறுத்தமட்டில் இருமொழித்திட்டம் அதாவது தமிழ் ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் தொடர்பு மொழியாகவும் இருப்பதே அரசின் கொள்கையாகும். தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழிக்காகவும் அதன் மேம்பாட்டிற்காகவும் குறிப்பிடத்தக்க வகையில் தொண்டாற்றிய அனைவருக்கும் அதிலும் குறிப்பாக தாய்மொழி மீது கொண்ட பற்றின் காரணமாக போராடி தண்டனை அனுபவித்தவர்களுக்கும், கன்னியாகுமரி, திருத்தணி ஆகிய இடங்களில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப் போராடியவர்களையும் சேர்த்து அவர்களின் குடும்பங்களுக்கும் உதவித் தொகை அளிக்க ஏற்றதொரு திட்டத்தை ஒரு சட்டம் இயற்றி அதன் வாயிலாக செயல்படுத்துவது என்று முடிவு செய்து அவ்வகையில் ஒரு சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டு வருகிறது. விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு அது சமர்ப்பிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஏற்கனவே இந்த மாமன்றத்தில் எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அது கொடுக்கப்படவில்லை. இப்போது மாண்புமிகு முதலமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளர் அவர்கள் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். எப்போது கொடுக்கப்படும், எப்போது அந்தச் சட்டமுன்வடிவு இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்பதை அறிவிப்பார்களா? அதோடு, ஏற்கனவே கொடுக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட அந்த இடைக்காலத்திற்கும் சேர்த்து, இனிமேல் தருகிறபோதாவது சேர்த்து கொடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் அவர்கள் கூறுவார்களா?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இதைப்பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அளித்துவரும் உதவித்தொகை ரூபாய் 75 என்று அளிப்பதை ரூபாய் 100 என்று கொடுக்க முன்வருவதாக அறிவித்தது. அதற்கான அரசாணையை விரைவில் அறிவிக்க முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு பதில் அளித்தாகிவிட்டது.

திருப்புவனம் காவல் சரகம்

***வினா எண். 80-ஆ—திரு. வ. மு. சுப்பிரமணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதியில் திருப்புவனம் காவல் நிலைய சரகத்தினை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. வ. மு. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த திருப்புவனம் காவல் பரப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. பரப்பு மிகவும் அதிகமாக இருப்பதால் ஆங்காங்கே நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகளை காவல் துறையினர் சென்று விசாரிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் போவதற்கு சாலை வசதியும் சரியாக இல்லை. புகார் கொடுப்பதற்காக மக்கள் வர வேண்டுமென்றால் பல மைல் நடந்து வரவேண்டும். மேலும் பரப்பு அதிகமாக இருப்பதால் காவல் துறையினர் திறமையாகச் செயலாற்ற முடியவில்லை. ஆகவே, அதை இரண்டாகப் பிரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, இராமநாதபுரம் (கிழக்கு) காவல் மாவட்டம் மானாமதுரைத் தொகுதியிலுள்ள திருப்புவனம் காவல் நிலைய சரகம் பிரிக்க அவசியமில்லாத அளவில் (காம்பாக்ட்) உள்ளது. பலாத்காரத்துடன் நடந்த சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஏதும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திருப்புவனம் காவல் நிலையத்தில் அறிவிக்கப்படவில்லை. ஒரு ஆண்டில் இந்திய பீனல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, மற்றொரு காவல் நிலையம் திறக்க வேண்டிய அளவுக்கு அதிகமாக இல்லை. ஆகவே, திருப்புவனம் காவல் நிலைய சரகத்தை இரண்டாகப் பிரிக்கும் அவசியமேதும் தற்பொழுது இல்லை.